மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சோளிங்கர், வேலூர் மாவட்டம்.

முன்னிலை : திரு.என்.இரமேஷ்,பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சோளிங்கர்.

2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் நாள் புதன்கிழமை

அசல் வழக்கு எண்.1/2018

N.சாவித்திரி - வாதி

//எதிர்//

1. மாவட்ட ஆட்சியர்,
வேலூர் மாவட்டம்,
வேலூர்.

2. வட்டாட்சியர்,
நெமிலி வட்டம்.

3. புஷ்பராணி,

4. சுசீலா
(D3 to D5 counsel filed memo stating that D4 name is Suseela but in the plaint mistakenly stated Siva. Amended as per Order in I.A No.117/2018, Dated : 21.03.2018 APC dispense memo filed and recorded)

5. தினகர் - பிரதிவாதிகள்

WEB COPY

அசல் வழக்கானது 26.03.2018ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.Y.C.இரகுராம ராஜூ அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.R.நரசிம்மன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சக்கரவர்த்தி அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்த பின்னர், இருதரப்பு வாதங்களையும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

தீர்ப்பு

வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், பாணாவரம் கிராமத்தில் கடந்த 27.04.1985 தேதியில் இறந்துப் போன கோவிந்தராஜ் என்பவரின் சட்டப்படியான வாரிசுகளாக வாதி மற்றும் 3 முதல் 5 பிரதிவாதிகளை விளம்புகை செய்ய வேண்டுமெனவும் மற்றம் இதர பரிகாரத்திற்காகவும் வாதிகளால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:-

3ம் பிரதிவாதி இறந்துப் போன கோவிந்தராஜின் முதல் மனைவி என்றும், இறந்துப் போன கோவிந்தராஜின் முதல்மனைவி மூலம் பிறந்தவர்கள் 4 மற்றும்

*5ம் பிரதிவாதிகள் என்றும், வாதி மட்டுமே இறந்துப் போன கோவிந்தராஜின் இரண்டாவது மனைவி காசியம்மாள் மூலம் பிறந்த ஒரே வாரிசு என்றும், வாதியின் தந்தை கோவிந்தராஜ் 27.04.1985 தேதியிலும், இறந்துப் போன கோவிந்தராஜின் இரண்டாவது மனைவி காசியம்மாள் 14.09.1997 தேதியிலும் இறந்துவிட்டனர் என்றும், வாதி மற்றும் 3 முதல் 5 பிரதிவாதிகள், இறந்துப் போன கோவிந்தராஜின் 1 மற்றும் 2ம் மனைவிகள் மூலம் இறந்துப் போன கோவிந்தராஜின் சொத்தடைந்த வாரிசுகள் என்றும், வாதிகள் மற்றும் 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கிடையே சொத்துக்களை பாகம் பிரிக்க இறந்துப் போன கோவிந்தராஜின் வாரிசு சான்றிதழ் கோரி 2ம் பிரதிவாதி முன்னிலையில் வாதி மனு கொடுத்ததன் அடிப்படையில், "இறந்துப் போன கோவிந்தராஜ் என்பவருக்கு இரண்டு மனைவிகள் என்பதாலும், மேற்படி கோவிந்தராஜ் 32 ஆண்டுகளுக்கு முன்பே இறந்துவிட்டார் என்பதாலும், எனவே நீதிமன்றத்தின் மூலம் வாரிசு சான்று பெற்றுக் கொள்ளுமாறு" ந.க.சி.4/4038/2017, நாள் 30.10.2017 தேதியிட்ட கடிதத்தை 2ம் பிரதிவாதி கொடுத்துள்ளதன் அடிப்படையில் வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், பாணாவரம் கிராமத்தில் கடந்த 27.04.1985 தேதியில் இறந்துப் போன கோவிந்தராஜ் என்பவரின் சட்டப்படியான வாரிசுகளாக வாதி மற்றும் 3 முதல் 5 பிரதிவாதிகளை விளம்புகை செய்ய கோரி வாதியால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

WEB COPY

*<u>3) 2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :–</u>*

*தாவா சங்கதிகள் பொய்யானவை, தவறானவை. வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளில், வாதி 2ம் பிரதிவாதியின் அலுவலகத்தை அணுகி இறந்துப் போன கோவிந்தராஜின் வாரிசு சான்று கோரி மனு கொடுத்த போது, 2ம் பிரதிவாதி 30.10.2017 தேதியிட்ட பதிலறிவிப்பு மூலம் மேற்படி கோவிந்தராஜுக்கு இரண்டு மனைவிகள் என்பதால் நீதிமன்றத்தை அணுகி வாரிசு சான்று பெற்றுக் கொள்ளுமாறு வாதிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளார் என்பதை ஒப்புக் கொண்டு, தாவாவில் உள்ள மற்ற சங்கதிகளை வாதி தகுந்த முறையில் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார் என்றும், உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 80ன் படி வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு பிரதிவாதிகள் தரப்பில் பிரார்த்திக்கப்பட்டுள்ளது.*

*4) 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில், மேற்படி வழக்கில் வாதிக்கு சாதகமாக அளிக்கும் தீர்ப்பாணையை பொறுத்து 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று குறிப்புரை தாக்கல் செய்யப்பட்டு பதியப்பட்டுள்ளது.* (D3 to D5 counsel filed memo stating that No objection for getting degree in favour of plaintiff. Memo recorded)

5. வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை இரண்டையும் பரிசீலனை செய்தப்பின், இவ்வழக்கில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டுள்ளது :–

1. வாதி கோரும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
2. இதர பரிகாரம் என்ன?

6. வாதி தரப்பில் வாதி N.சாவித்திரி வா.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.6 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.2 சாட்சியாக தேவன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் 5ம் பிரதிவாதி தினகர் பி.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, பி.த.சா.ஆ.1 முதல் பி.த.சா.ஆ.4 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இருதரப்பிலும் சாட்சிகள் முழுமையாக விசாரிக்கப்பட்டும், இருதரப்பிலும் மேலும் சாட்சிகள் எவரையும் விசாரிப்பதற்கு இல்லை என்று தாவாவில் மேற்குறிப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் இருதரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டது.

7. எழுவினாக்கள் :– 1 மற்றும் 2

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்ட வாதி N.சாவித்திரி தன் முதல் சத்தியப் பிரமாண வாக்குமூலத்தில், தனது தகப்பனார் கோவிந்தராஜ் 27.04.1985லும், தன் தகப்பனார் கோவிந்தராஜின் இரண்டாவது மனைவியும், தனது தாயாருமான காசியம்மாள் 14.09.1997லும் காலமாகிவிட்டனர் என்றும், தான் கோவிந்தராஜின் இரண்டாவது மனைவி காசியம்மாளுக்கு பிறந்த ஒரே வாரிசு ஆவேன் என்றும், பிரதிவாதிகள் 3 முதல் 5 நபர்கள் கோவிந்தராஜின் வாரிசு ஆவார்கள் என்றும், எங்கள் குடும்ப சொத்துக்களை பங்கிட வாரிசு சான்றிதழ் தேவைப்படுவதால் வாரிசு சான்று கோரி 2ம் பிரதிவாதியிடம் மனு கொடுத்து அம்மனுவிற்கு 2ம் பிரதிவாதி நா.கா.சி.4/4038/2017 நாள் : 30.10.2017இல் வாரிசு சான்று நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்ளும்படி பதில் வழங்கினார்கள் என்றும், எனவே வாரிசு சான்று கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளேன் என்றும் சாட்சியமளித்து, வாதிக்கு ஆதரவாக மொத்தம் 6 சான்றாவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், வா.சா.2 சாட்சியாக விசாரிக்கப்பட்ட தேவன் என்பவர் வா.சா.1இன் சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளதாலும், மேற்படி சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையிலும் வாதி தன் தரப்பு வழக்கை நிரூபித்துள்ளதால் இவ்வழக்கை அனுமதிக்குமாறு வாதி தரப்பில் பிரார்த்திக்கப்பட்டது.

WEB COPY

8. மாறாக 1, 2 பிரதிவாதிகள் தரப்பில், 2ம் பிரதிவாதி "காலமான கோவிந்தராஜ் த/பெ.லேட்.செல்லன் என்பவர் காலமாகி 32 ஆண்டுகள் என்பதாலும் மற்றும் இரண்டு மனைவிகள் என்பதாலும் வாரிசுதாரர் பற்றிய விவரம் சரிவர தெரியாததாலும் மனுதாரர் கோரும் வாரிசு சான்று வழங்க இயலாது என மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது" என 30.10.2017 தேதியில் வாதிக்கு கடிதம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளதை மட்டும் ஒப்புக் கொண்டும்" மற்ற தாவா சங்கதிகளை வாதிகள் தகுந்த முறையில் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளனர் என்றும், உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 80ன் படி வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு பிரதிவாதிகள் தரப்பில் பிரார்த்திக்கப்பட்டுள்ளது.

9. 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில், மேற்படி வழக்கில் வாதிக்கு சாதகமாக அளிக்கும் தீர்ப்பாணையை பொறுத்து 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று குறிப்புரை தாக்கல் செய்யப்பட்டு பதியப்பட்டுள்ளது. மேலும் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்ட 5ம் பிரதிவாதி தினகர் தன் முதல் சத்தியப் பிரமாண வாக்குமூலத்தில், தனக்காகவும், 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்காகவும் இவ்வாக்குமூலத்தை தாக்கல் செய்வதாகவும், 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.த.சா.ஆ.1 முதல் பி.த.சா.ஆ.4 ஆவணங்களின் அடிப்படையில் 3 முதல் 5 பிரதிவாதிகளையும் இறந்துப் போன கோவிந்தராஜ் என்பவரின் சட்டப்படியான வாரிசுகளாக சேர்த்து உத்தரவிடுமாறு சாட்சியமளித்துள்ளார்.

WEB COPY

10. இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்கள், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் பரிசீலனை செய்தது. வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், பாணாவரம் கிராமத்தில் கடந்த 27.04.1985 தேதியில் இறந்துப் போன கோவிந்தராஜ் என்பவரின் சட்டப்படியான வாரிசுகளாக வாதி மற்றும் 3 முதல் 5 பிரதிவாதிகளை விளம்புகை செய்யக் கோரி வாதி தாவா தாக்கல் செய்துள்ளார்.

11. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.3 ஆவணத்தினை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்ததில், 2ம் பிரதிவாதி முன்னிலையில் வாதி இறந்துப் போன கோவிந்தராஜின் வாரிசு சான்று கோரிய மனுவின் மீது விசாரணை செய்ததின் பேரில் "காலமான கோவிந்தராஜ் த/பெ.லேட்.செல்லன் என்பவர் காலமாகி 32 ஆண்டுகள் என்பதாலும் மற்றும் இரண்டு மனைவிகள் என்பதாலும், வாரிசுதாரர் பற்றிய விவரம் சரிவர தெரியாததாலும் மனுதாரர் கோரும் வாரிசு சான்று வழங்க இயலாது என

மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது" என ந.க.சி.4/4038/2017, நாள் 30.10.2017 தேதியிட்ட மேலெழுத்துக் கடிதம் வா.த.சா.ஆ.3 ஆவணத்தை 2ம் பிரதிவாதி வாதிக்கு கொடுத்துள்ளதன் அடிப்படையில் வாதி இறந்துப் போன கோவிந்தராஜின் வாரிசு சான்று வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகின்றது. மேலும் 1, 2 பிரதிவாதிகளும் தங்களது பதிலுரையில் வா.த.சா.ஆ.3 சான்றாவணத்தினை ஒப்புக்கொண்டுள்ளனர்.

12. வாதி தரப்பில் 3ம் பிரதிவாதியின் கணவரும், வாதி மற்றும் 4, 5 பிரதிவாதிகளின் தந்தையுமான கோவிந்தராஜ் கடந்த 27.04.1985 தேதியில் இறந்தார் என்பதற்கான இறப்புச் சான்றிதழ் - நகல் வா.த.சா.ஆ.1 சான்றாவணம் மூலமும், வா.த.சா.ஆ.1இல் கோவிந்தராஜ் இறந்த இடமாக குறிப்பிட்டுள்ள "சோளிங்கர் ரயில்வே ஸ்டேஷன் அருகில், பாணாவரம்" இந்நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் உள்ளது என்பதையும், இறந்துப் போன கோவிந்தராஜின் இரண்டாவது மனைவி காசியம்மாள் கடந்த 14.09.1997 தேதியில் இறந்தார் என்பதை வா.த.சா.ஆ.2 சான்றாவணம் மூலமும் வாதி இந்நீதிமன்றத்தில் நிரூபித்துள்ளார்.

WEB COPY

13. வாதி இறந்துப் போன கோவிந்தராஜின் வாரிசு என்பதை நிரூபனம் செய்யும் வகையில், வா.த.சா.ஆ.4 வாதியின் குடும்ப அட்டை நகல், வா.த.சா.ஆ.5 வாதியின் ஆதார் அட்டை நகல் மற்றும் வா.த.சா.ஆ.6 வாதியின் ஸ்மார்ட் கார்டு குடும்ப அட்டை நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 3 முதல் 5 பிரதிவாதிகள் இறந்துப் போன கோவிந்தராஜின் வாரிசு என்பதை நிரூபனம் செய்யும் வகையில், பி.த.சா.ஆ.1 குடும்ப அட்டை நகல், பி.த.சா.ஆ.2 - 4ம் பிரதிவாதி சுசீலாவின் ஆதார் அட்டை நகல், பி.த.சா.ஆ.3 - 5ம் பிரதிவாதி தினகரின் ஆதார் அட்டை நகல் மற்றும் பி.த.சா.ஆ.4 - 5ம் பிரதிவாதி தினகரின் ரயில்வே மருத்து அடையாள அட்டை நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.த.சா.ஆ.4 முதல் வா.த.சா.ஆ.6 மற்றும் பி.த.சா.ஆ.1 முதல் பி.த.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் மூலம் வாதி மற்றும் 3 முதல் 5 பிரதிவாதிகள் இறந்துப் போன கோவிந்தராஜின் சட்டப்படியான வாரிசுகள் என்பதை நிரூபனம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

14. மேலும் லேட். கோவிந்தராஜ், காசியம்மாள் என்பவருடன் செய்துக் கொண்ட இரண்டாவது திருமணத்தைப் பொறுத்த வரையில்,

<u>HINDU MARRIAGE ACT – 1955 SEC.5</u>

Condition for marriage :-

A Marriage may be solemnized between any two Hindus, the following conditions are fulfilled, namely :-

(i) neither party has a spouse living at the time of the marriage.

இந்த வழக்கில் லேட். கோவிந்தராஜ் முதல் மனைவி புஷ்பராணியுடன் (3ம் பிரதிவாதி) செய்த திருமணம் நடைமுறையில் இருக்கும் போதே இரண்டாவது திருமணம் செய்துள்ளார். எனவே லேட். கோவிந்தராஜ் இந்து திருமண சட்டம் பி.5(i) இன் நிபந்தனையை மீறியுள்ளதால்,

Hindu Marriage Act – 1955 S.11 படி,

லேட். கோவிந்தராஜ் செய்த இரண்டாவது திருமணம் இல்லா நிலையது என்றாலும், இரண்டாம் மனைவி மூலம் பிறந்த குழந்தை (Illegitimate child) வாரிசுகளாக கருதப்படுவார்கள். இவ்வழக்கில் இறந்துப் போன கோவிந்தராஜின் இரண்டாவது மனைவி இறந்துவிட்டார் என்பதை வா.த.சா.ஆ.2சான்றாவணம் மூலம் தெரியவருகின்றது.

15. தாவா சங்கதிகள் வாதி தரப்பில், தகுந்த வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவண சான்றுகள் மூலம் நிருபிக்கப்பட்டுள்ள காரணத்தினால், இரண்டாம் மனைவி மூலம் பிறந்த குழந்தை (Illegitimate child) வாதி, முதல் மனைவி மூலம் பிறந்த 4 மற்றும் 5 பிரதிவாதிகள் மற்றும் முதல் மனைவியாகிய 3ம் பிரதிவாதி மட்டுமே இறந்துப் போன கோவிந்தராஜின் முதல் நிலை வாரிசுகள் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எழுவினா1 வாதிக்கு சாதகமாக தீர்வு காண்கிறது. மேலும் எழுவினா 1 வாதிக்கு சாதகமாக தீர்வு காணப்பட்டுள்ளதால், வாதி தாவாவில் வேறு எந்தப் பரிகாரமும் பெற முடியாது என 2வது எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

16. இறுதியில், தாவா அனுமதிக்கப்படுகிறது. வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், பாணாவரம் கிராமத்தில் கடந்த 27.04.1985 தேதியில் இறந்துப் போன கோவிந்தராஜ் என்பவரின் சட்டப்படியான வாரிசுகளாக வாதி மற்றும் 3 முதல் 5 பிரதிவாதிகளை விளம்புகை செய்து தாவா தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்ட பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ம் நாளான இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சோளிங்கர்.

WEB COPY

<u>வாதி தரப்பு சாட்சிகள் :-</u>

வா.சா.1 - N.சாவித்திரி (வாதி)

வா.சா.2 - தேவன்

<u>வாதி தரப்பு சான்றவாணங்கள் :-</u>

| | | |
|---|---|---|
| வா.த.சா.ஆ.1 | - 27.04.1985 | தேதியில் வாதியின் தந்தை கோவிந்தராஜ் இறந்தார் என்பதற்கான இறப்புச் சான்றிதழ் - நகல் |
| வா.த.சா.ஆ.2 | - 15.09.1997 | தேதியில் கோவிந்தராஜின் இரண்டாவது மனைவி காசியம்மாள் இறந்தார் என்பதற்கான இறப்புச் சான்றிதழ் - அசல் |
| வா.த.சா.ஆ.3 | - 30.10.2017 | தேதியில் நெமிலி வட்டாட்சியரால் இறந்துப் போன கோவிந்தராஜின் மகள் வாதி சாவித்திரிக்கு கொடுக்கப்பட்ட மேலெழுத்துக் கடிதம் ந.க.சி4/4038/2017, நாள் :30.10.2017. |
| வா.த.சா.ஆ.4 | - | வாதி சாவித்திரியின் குடும்ப அட்டை நகல் |
| வா.த.சா.ஆ.5 | - | வாதி சாவித்திரியின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| வா.த.சா.ஆ.6 | - | வாதி சாவித்திரியின் ஸ்மார்ட் கார்டு குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |

WEB COPY

<u>3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி :-</u>

பிசா.1 - தினகர் (5ம் பிரதிவாதி)

<u>3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :-</u>

| | | |
|---|---|---|
| பி.த.சா.ஆ.1 | - | 5ம் பிரதிவாதி தினகரின் குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| பி.த.சா.ஆ.2 | - | 4ம் பிரதிவாதி சுசீலாவின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| பி.த.சா.ஆ.3 | - | 5ம் பிரதிவாதி தினகரின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| பி.த.சா.ஆ.4 | - | 5ம் பிரதிவாதி தினகரின் ரயில்வே அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சோளிங்கர்.